**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண்: 231/2024 ஜெயபாலன் (பிசா1) தேதி:06.04.2026**

**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

சங்கநிர்வாக குழுவில் இருந்து எத்தனை நபர்களை சங்கத்திற்கு தேர்ந்தெடுப்போம் என்றால் தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாலர், நிர்வாககுழு உறுப்பினர்கள் 8 பேர் ஆகியோர்கள் தலைவரால் தேர்தெடுக்கப்படுவார்கள். அந்த நிர்வாககுழு உறுப்பினர் 8 பேர்களுக்கு பதவி எதுவும் உள்ளதா என்றால் உறவின்முறை நிர்வாககுழு பதவி உள்ளது. நிர்வாககுழு கூட்டம் அல்லது பொதுகுழு கூட்டத்திற்கு தலைமை வகிப்பது சங்கதலைவரின் கடமை என்றால் சரிதான். சங்கதுணை விதிகளின்படி தலைவர் இல்லாத நிலையில் உபதலைவர் நிர்வாககுழு கூட்டம் அல்லது பொதுகுழு கூட்டத்திற்கு தலைமை வகிப்பது கடமை என்றால் சரிதான். சங்கத்தின் தலைவர், உபதலைவர் இல்லாத நிலையில் சங்ககுழுகூட்டம் நடைபெறாதா என்றால் நிர்வாககுழுவை பொறுத்தவரையில் அவர்கள் இருவரும் இல்லாதநிலையில் மூத்த நிர்வாககுழு உறுப்பினர் அவர் தலைமை வகிப்பார். பொதுகுழுவைபொறுத்தவரையில் தலைவர், உபதலைவர் இல்லாதநிலையில் நடைபெறாது. சங்கத்தின் தலைவர், உபதலைவர் இல்லாத நிலையில் பொதுகுழுகூட்டப்பட்டு தீர்மானம்நிறைவேற்றப்பட்டிருந்தால் அந்த தீர்மானமே செல்லாது என்றால் அவ்வாறு பொதுகுழுவே கூட்டமுடியாது. இந்த வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல்செய்யப்பட்ட எதிர்வழக்குரைக்கு நான்தான் முழுக்கமுழுக்க வழக்கறிஞரிடம் விவரம் கூறினேன். நான்தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை 17 வது பாராவில் பிராதுடன் வாதிகள் தாக்கல் செய்துள்ள 1 வது ஆவணம் மோசடியானது என குறிப்பிட்டுள்ளளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் மோசடியானது என எந்தஅடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அந்த ஆவணத்தில் ஒரு பக்கம்மட்டும் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. அந்த 1 வது ஆவணத்தில் 4 வது பக்கத்தில் உள்ள விதி தவிர இதர விதிகள் சரியானவையா? என்றால் என்னால் உறுதியாக கூறமுடியவில்லை. அந்த 1 வது ஆவணத்தில் சங்க நிர்வாககுழுஉறுப்பினர்கள் மொத்தம் 50 பேர் என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால்

சரிதான். எனது எதிர்வழக்குரையில் மேற்படி உறுப்பினர்களின் எண்ணிக்கை 65 இருக்கவேண்டும் என்றும், ஆனால் வாதிகளின் 1வது ஆவணத்தில் 50 என உள்ளது தவறு எனக்கூறிதான் குறிப்பிட்டுள்ளேன்என்றால் சரிதான். உறவின்முறை சங்கத்திற்கு 65 நபர்கள் நிர்வாககுழுஉறுப்பினர்கள் என்றும், வாதிகள் குறிப்பிடும் 50 நபர்கள் என்ற எண்ணிக்கை இல்லை என்பதுதான் எங்கள் கட்சி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விவரங்கள் சரியானவைதான் என்றால் சரிதான். **பி.சா.ஆ.1** ஆவணம்தான் உறவின்முறை சங்கத்தின் தற்போதைய துணைவிதிகள் என எந்தஅடிப்படையில் கூறுகிறேன் என்றால் 2016ம் வருடம் துணைவிதிகளின் சிலதிருத்தம்செய்யப்பட்டது. அந்த திருத்தங்கள் **பி.சா.ஆ.1**ல்இருப்பதால் அது உண்மையான ஆவணம் என நான் கூறுகிறேன். வாசங்கள் ஒத்துபோவதால்மட்டுமே நான் தாக்கல்செய்துள்ள **பி.சா.ஆ.1** உண்மையான ஆவணம் என கூறமுடியாது என்றால் சரியல்ல. **பி.சா.ஆ.1**ல் சங்கபதிவாளரின் கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2லும் சங்கபதிவாளரின் கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணம் பிறப்பிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பி.சா.ஆ.2 அடிப்படையில் ஏற்பட்டுள்ளது என்றால் சாட்சி அந்த ஆவணத்தை படித்துபார்த்துவிட்டு தனக்கு ஞாபகம் வரவில்லைஎன கூறுகிறார். பி.சா.ஆ.5 பற்றி தற்போது என்னால் சாட்சியம்அளிக்க முடியாது என்றால் அந்த ஆவணத்தைபற்றி எனக்கு சரியாக விவரம் தெரியாததால் சாட்சியமளிக்கமுடியாது. எனது நிரூபணவாக்குமூலத்தில் பி.சா.ஆ.5 யைபற்றி குறிப்பிட்டுள்ள நிலையில் எனது நிரூபணவாக்குமூலத்தில் உள்ள மொத்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் நாட்கள் ஆகிவிட்டதால் எனது நினைவுக்கு வரவில்லை. உயர்நீதிமன்றத்தில் உறவின்முறை சம்பந்தமாக யார் யார்மீது என்னென்ன வழக்குகள் தாக்கல்செய்தார்கள் என்ற விவரம் தற்போது என்னால் கூறமுடியாது என்றால் சரிதான்.

**குறுக்குவிசாரணைதொடர்ச்சி:** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்)D.மாரிக்காளை,B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.